1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : இரண்டு ரூபாயாக இருந்ததை மாண்புமிகு சாதிக் பாட்சா அவர்கள்தான் ஐந்து ரூபாயாக ஆக்கினுர்கள். 1972-ல் ரூ. 2½ என்றிருந்தது 1974-ல் ரூ. 5 ஆக ஆகியது. இப்போது ஒரு ரூபாய் குறைத்து இருக்கிறோம், அதற்கு அவர் பாராட்ட வேண்டும்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: பிரச்னை இப்போது வந்திருப்பதால் நாங்கள் இருந்தாலும் குறைத்திருப்போம். ஆகவே இப்போது அதைக் குறைக்க முடியுமா ? (பதில் இல்லை.)

பம்பு செட்டுகளுக்கு மின்இணைப்பு

*வினா எண் 42—திரு. வெ. கருணாமூர்த்தி: மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

1974-75 ஆம் ஆண்டில், 60,000 விவசாய பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்க தமிழக அரசிடமிருந்து மின் வாரியத்திற்கு ஏதேனும் குறிப்பாணை அனுப்பப்பட்டதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: அரசிடமிருந்து ஆணை அனுப்ப வேண்டியதில்லை.

தமிழ்நாடு கூட்டுறவு இணையப் பணியாளர்கள்

*வினா எண் 43—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாடு கூட்டுறவு இணையத்திற்கும் அதன் ஊழியர் சங்கத்திற்கும் நடந்த ஒப்பந்தப்படி நிரந்தரமாக்கியதில் விடுபட்டுள்ளவர்களை 31—10—1977-க்குள் நிரந்தரமாக்கவும் 25—6—1977-லிருந்து பின் தேதியிட்டு ஊதியம் வழங்கவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கும் அதன் ஊழியர் சங்கத்திற்கும் கடந்த 17—5—1977 அன்று ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின்படி தமிழ்நாடு கூட்டுறவு

1978 செப்டம்பர் 2]

விற்பனை இணையத்தின் ஊழியர்களுக்கு பல்வேறு நிலைகளைச் சார்ந்த 279 பேர்களுடைய பணிகள் 25—6—1977 முதல் அவர்கள் டென்யூர் முறைப்படுத்தப்பட்டிருக்கிறது. முறைப்படுத்துவதில் சில தடங்கல் உள்ள 56 பணியாளர்களுடைய நிலைகள் பரிசீலனையில் இருக்கிறது என்பதை நான் அவையின் மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 9-10.)

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பெயரிலேயே ஒரு சிக்கல், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் என்பது. இந்த ஒப்பந்தம் நடந்தும், தொழிலாளர்களை நிரந்தரமாக்குவதும், பின்தேதியிட்டு ஊதியம் வழங்குவதிலும், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் சரியான கவனம் செலுத்தவில்லை என்பதை கருத்திற்கொண்டு, இந்த ஒப்பந்தத்தை நிறைவேற்றுகின்ற வகையில் அனைவரையும் நிரந்தரமாக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே மூலக் கேள்விக்கு நான் பதில் செல்லுகின்ற நேரத்திலேயே நான் சுட்டிக்காட்டியது போல் 279 பணியாளர்கள் நிரந்தரமாக்கப்பட்டு முறைப்படுத்தப் பட்டிருக்கிறார்கள். மற்ற 56 பேர்கள் பிரச்னையில் அது நிர்வாகப் பிரச்னையாக இருக்கிறது, அவர்களுக்கு அங்கு இடம் காலி யில்லாததால் நிரந்தரமாக்காமல் முறைப்படுத்தப்படாமல் இருக்கிறது. விரைவில் அதுவும் செய்து முடிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு விற்பனை கூடக் கடைகளில் பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குவெறும் 50 ரூபாய், 60 ரூபாய் சான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இது மிகவும் போதாத நிலையில் இருப்பதால் தாங்கள் விற்பனை செய்கின்ற பொருட்களை பிளாக் மார்க்கெட்டில் விற்று வருவதால், விலையேறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இவர்களது சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க அரசிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

[1978 செப்டம்பர் 2

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, 17—5—1977-ல் நடந்த ஒப்பந்தத்தைப் பற்றித்தான் மூலக்கேள்வி இருக்கிறது. எனவே அதையொட்டிய துணைக்கேள்வியாக இது இல்லையாததால், உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, செய்யப்பட்ட ஒப்பந்தத்தை ஊழியர்களுக்கு முறையாக அமல்படுத்தாமல் கூட்டுறவிலேயே தவறுகளும் காலதாமதமும் ஏற்படுகிறது என்பதை அமைச்சர் அவர்களது விடையிலிருந்து தெரிய வருகிறது. கூட்டுறவில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் சங்கங்கள் அமைத்துக் கொள்ள வேண்டுமென்றாலும் அதிலுள்ள அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவிக்கின்றார்கள், வேறு பலவிதத்திலும் நிர்பந்தித்து வருகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அமலாக்காமலும், சங்கங்கள் அமைப்பதற்கு இடையூறாகவும் செயல்படுகின்ற கூட்டுறவு அதிகாரிகள் மீது சரியான கண்காணிப்பு இருந்தால்தான் இப்படிப்பட்ட குறைகள் போகும் என்பதை உணர்ந்து இதன் பேரில் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த தமிழக அரசு செய்யப்பட்ட ஒப்பந்ததை அணு அளவு கூட நிறைவேற்றுவதில் உறுதியாக இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி: செய்யப்பட்ட ஒப்பந்தத்தை அமலாக்குவதில் அரசுக்கு மிகுந்த அக்கறை இருப்பதற்கு மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இந்த ஒப்பந்தங்கள் நிறைவேறக் கூடாது என்ற கருத்தோடு, கூட்டுறவுத் துறை சீரழிய வேண்டும் என்ற எண்ணத்தோடு அதிகாரிகள் செயலாற்றுவதின் விளை வாகத்தான், இதிலுள்ள தொழிலாளர் தூண்டப்பட்டு வேலை நிறுத்தம் போன்றவைகளில் ஈடுபட வேண்டியிருக்கிறது. உதாரணமாக பாமணி பெர்டிலைசரில் 16—8—1978, 17—8—1978 வேலை நிறுத்தம் நடந்து இருக்கிறது. ஆகவே நமது புதிய அமைச்சர் அவர்கள் மிகுந்த வேகத்தோடு இதை நிறைவேற்று வதற்கு நடவடிக்கை எடுப்பார்களா?

1978 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாமணி உர ஆலையிலுள்ள விஷயங்களைப் பற்றி கடந்த மூன்று மாதங்களாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல விவரங்களை என்னிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் செவிமடுத்துக் கேட்டு அதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறேன். தொடர்ந்து நடவடிக்கை எடுப்பதிலும் தமிழக அரசு உறுதியாக இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடு) ஆம் பழைய உறுப்பினர்—நான் புதியவன்—உறுப்பினர் அவர்கள் நீண்டநாள் அனுபவம் பெற்றவர்—அவர்களுக்கு இந்த விவரத்தை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சிமொழிக் குழு

*வினா எண் 44—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ் ஆட்சி மொழிக்குழு தனது பணியை எந்த அளவுக்கு முடித்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அவைமுன் ஒரு அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, தரப்படுத்தப்பட்ட தமிழ் தட்டச்சுப் பொறியினை உருவாக்கியதோடு, அதனை உற்பத்தி செய்து அரசு அலுவலகங்களுக்கு வழங்க ஆவன செய்தது என்ற பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அப்படி தரப்படுத்தப்பட்ட தமிழ் தட்டச்சுப் பொறியினை உருவாக்கிய நேரத்தில், தந்தை பெரியார் அவர்கள் தமிழகத்திலே உருவாக்கிய எழுத்துச் சீர்திருத்தத்தை இந்தத் தட்டச்சுப் பொறியில் பயன்படுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி அரசு முடிவெடுத்த பிறகுதான், அதை எப்படிப் பயன்படுத்துவது என்கின்ற நிலைமை வர முடியும்.

---

* 608-609 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பெற்றுள்ளது.